## மதுவரி திணைக்களத்தின் மதுவரி வெகுமதி நிதியம் - 2023

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மதுவரி திணைக்களத்தின் மதுவரி வெகுமதி நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றின் பொழிப்பினை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1990 இன் 37 ஆம் இலக்க மதுவரி கட்டளைச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1912 இன் 08 ஆம் இலக்க மதுவரி கட்டளைச் சட்டத்தின் 58 ‘‘ஏ’’ பிரிவு மற்றும் மதுவரி கட்டளைச் சட்டத்தின் 32(2) (கிவ்) பிரிவின் கீழான இலக்கம் 818 மதுவரி அறிவித்தல் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற

தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் விடயப் பரப்பு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இணங்கியிருந்தது என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தன என்பதும், நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தன என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 3,771,335 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் பெறுமானத் தேய்வு ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்ட ரூபா 11,707,328 முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்க வேண்டியிருந்த போதும் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 07 இன் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் தனித்தனியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 47,134,000 ஆன காணி மற்றும் கட்டிடங்கள் தனித்தனியாக இனங்காணப்பட்டிருக்க வில்லை. | காணி மற்றும் கட்டிடங்கள் முறையான பிரகாரம் கையேற்ற பின்னர் மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் தனித்தனியாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் - 07 இன் பிரகாரம் கட்டிடத்தின் பெறுமதியை இனங்கண்டு பெறுமானத் தேய்வு சீராக்கங்களுக்காக அதன் பயன்தரு ஆயுட்காலம் முழுவதும் சீரான அடிப்படையில் பகிர்ந்தளிக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையும் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு செய்த பின்னர் கட்டத்தின் கிரய பெறுமதியில் எதிர்காலத்தில் பெறுமானத் தேய்வு கணிப்பீடு செய்யப்படும். | -மேற்படி- |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் - 07 இன் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் பட்டோலைகளில் சொத்துக்களில் அண்ணளவான இழிவு பெறுமதி, திரண்ட பெறுமானத் தேய்வு, தேறிய இழிவுப் பெறுமதி வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் கட்டிடம், தளபாடப் பொருட்கள், அலுவலக உபகரணங்களை உள்ளடக்கிய சொத்து தொகுதியில் 08 விடயங்களின் கூட்டுமொத்தமாக ரூபா 101,798,966 ஆன தேறிய இழிவுப் பெறுமதி மாத்திரம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி திகதியில் அந்த ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் அண்ணளவான இழிவுப் பெறுமதி ரூபா 190,995,393 ஆகும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

### 1.5.2 நிதியத்தின் தொடர்ச்சியான இருப்பு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிலும், கடந்த 04 வருடங்களிலும் மதுவரி வெகுமதி நிதியத்தின் தேறிய சொத்துக்களை ஒப்பீடு செய்த போது 2019 முதல் 2021 ஆம் ஆண்டு வரை நிதியத்தின் நிதி விளைவுகளில் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டதுடன் அதன் காரணமாக அந்த ஆண்டுகளின் தேறிய சொத்துக்களும் சீராக கவனத்திற்கொள்ளக்கூடிய வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்ட போதிலும் கடந்த ஆண்டிலும் மீளாய்வாண்டின் போதும் சீராக அதிகரித்திருந்தது. கடந்த ஆண்டின் போது அந்த அதிகரிப்பு சதவீதம் 19 சதவீதமாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 12 சதவீதமாக இருந்தது. | அவதானிப்புடன் இனங்குகின்றோம். | நிதியத்தின் வருமானத்தை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து செயற்பாட்டு மிகையை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிலும், கடந்த 04 வருடங்களிலும் திறைசேரியில் காணப்பட்ட நிதியத்தில் வைப்புக் கணக்கின் மீதியை ஒப்பீடு செய்த போது 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வீழ்ச்சியொன்று காணப்பட்டது. கடந்த ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் கவனத்திற்கொள்ளக்கூடிய அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. கடந்த ஆண்டில் அந்த அதிகரிப்பு சதவீதம் 34 வீதமாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அது 19 சதவீதமாக இருந்தது. | அவதானிப்புடன் இணங்குகின்றோம். | இலக்கம் 818 மதுவரி அறிவித்தலின் பிரகாரம் நிதியத்தில் வைப்புக் காணப்படுகின்ற மீதியை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| 1999 இன் 8 ஆம் இலக்க புகையிலை வரி சட்டத்தின் 17(அ) I மற்றும் II ஆம் பந்திகள் | கிடைக்கின்ற சிக்கரட் தண்டப் பணத்தில் 25 சதவீத பகுதியொன்றினால் புகையிலை வெகுமதி | 1999 இன் 08 ஆம் இலக்க புகையிலை வரி சட்டத்திற்குரிய கட்டளைகளின் தேவை புதிய திருத்தங்களை | புகையிலை வெகுமதி நிதியத்தை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| நிதியம் ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதும் நிதியம் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையும் அவ்வாறான நிதியம் ஒன்று ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதுவரையும் வருடாந்தம் ஒதுக்கப்பட்ட நிதி முதலீடு செய்யப்படாமல் புகையிலை வெகுமதி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 24,363,751 நீண்ட கால பொறுப்பாகக் காணப்பட்டது. | உள்ளடக்குவதற்காக சட்ட வரைவு திணைக்களத்துடன் கலந்துரையாடப்பட்டு உரிய மேற்கொள்ளல் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. அதன்கீழ் புகையிலை வரி சட்டத்திற்குரிய நிதியம் தொடர்பான முன்மொழிவு முறைமை வரைவில் வரைவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அந்த செயற்பாடுகளைப் பூர்த்தி செய்து புகையிலை நிதியத்தை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 36,968,594 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 48,444,530 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 11,475,936 அதாவது 23 சதவீத வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஒட்டுமொத்த கட்டணம் மற்றும் சிக்கரட் தண்டப்பணம் வருமானம் ரூபா 13,744,078 இனால் அதாவது 08 சதவீதத்தினால் அதிகரித்த போதிலும் வெகுமதி நிதியம் செலுத்துதல், பெறுமானத் தேய்வை உள்ளடக்கிய செலவினம் ரூபா 25,220,014 அதாவது 22 சதவீதத்தால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டில் நிதியத்தின் உள்ளபடியான வருமானம் ரூபா 173,290,859 ஆக இருந்ததுடன் அதில் 97 சதவீதம் ஒட்டுமொத்த கட்டண வருமானத்தை பிரதிநிதித்துவப்படுத்தி இருந்தது. மீளாய்வாண்டின் பாதீட்டின் பிரகாரம் ஒட்டுமொத்த கட்டண வருமானம் ரூபா 150,000,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அது | 2022 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் மேற்கொள்ளப்பட்ட பிகாரம் கிடைக்காமையினால் 2023 ஆம் ஆண்டின் போது 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 25 மில்லியன் குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | வருமானங்களை சரியாக எதிர்வுகூறி மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கடந்த ஆண்டில் பாதீட்டில் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 175,000,000 ஒட்டுமொத்த கட்டண வருமானத்துடன் ஒப்பிடும் போது ரூபா 25,000,000 அதாவது 17 சதவீதத்தினால் குறைத்து மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும் மீளாய்வாண்டில் ரூபா 162,558,319 ஒட்டுமொத்தமாக கட்டண வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) மீளாய்வாண்டில் நேர் ஊழியத்தில் மேற்கொண்ட உத்தியோகத்தர்களுக்காக ரூபா 23,285,638 மற்றும் ஒட்டுமொத்த பதவியணியினருக்கும் வெகுமதி படிக்காக ரூபா 66,180,256 நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. ஊழியத்திற்காக நேரடியாக பங்குபற்றுகின்ற உத்தியோகத்தர் களுக்காக வெகுமதிப் பணம் செலுத்தும் பிரதிநிதித்துவம் 26 சதவீதத்திற்கு குறைவான பெறுமதி மற்றும் ஒட்டுமொத்த பதவிவியணியினருக்கும் வெகுமதி நிதியம் செலுத்துதல் 74 சதவீதம் ஆகும். | 2023 ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளின் போது திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்களுக்கும் மதுவரி வெகுமதி நிதியத்தின் நிதியினைப் பயன்படுத்தி அடிப்படைச் சம்பளத்தல் 75 சதவீதம் மற்றும் அதற்கு குறைவான சதவீதத்தில் ஊக்குவிப்புப் படி செலுத்தப்பட்டிருந்ததுடன் நிதியத்தின் ஆரம்ப மீதி குறைந்ததன் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டின் போதும் கொடுப்பனவு ஒரு மாதச் சம்பளத்தில் 12 சதவீதம் மாத்திரமே செலுத்தப்பட்டிருந்தது. | நலன்களைச் செலுத்தும் போது இலக்கம் 818 மதுவரி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 செயலாற்றல்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மதுவரி திணைக்களத்தின் மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 4,000 தொழில்நுட்ப குற்ற சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டு 5,499 கண்டுபிடிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதில் 10 மதுவரி நிலையங்களில் இலக்கினை அடையும் செயல்முன்னேற்றம் குறைந்த | காணப்படுகின்ற உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை பரிசோதனை நடவடிக்கைகள் தொடர்பாக ஏற்பட்டிருந்த வரையறை, காணப்படுகின்ற கண்டுபிடிப்பு இலக்குகளை திருத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முன்மொழிவுகளின் பிரகாரம் இலக்கிடப்பட்ட | சுற்றி வளைப்புக்களில் தரச் செயல் முன்னேற்றத்தை அடைந்து கொள்வது தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பெறுமதியாக இருந்ததுடன் 10 மது நிலையங்களில் வருடாந்த இலக்கினை விஞ்சியிருந்த போதிலும் வழங்கப்பட்டிருந்த கண்டுபிடிப்பு இலக்கு வீழ்ச்சியடைந்திருந்தது. மேலும் மீளாய்வாண்டில் வெகுமதி நிதியம் செலுத்துவதற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட தொழில்நுட்ப குற்ற கண்டுபிடிப்புக்கள் 1,559 இல் தண்டப்பண பகுப்பாய்வின் பிரகாரம் 65 சதவீதம் சராசரி தொகுதியின் நிபந்தனையினை மீறியமைகளுக்கு உரிய சுற்றிவளைப்புக்கள் ஆகும். | அளவினை விட கண்டுபிடிப்புக்கள் குறைந்த அளவாக இருந்தது. சராசரி நிபந்தனைகளை மீறியமை அநேகமாக ஏற்பட்டிருந்ததுடன் பிரதான தொகுதியின் நிபந்தனைகளை மீறுதல் சிறிய அளவாகும். | |

## 4. பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் பாதீடு செய்யப்பட்ட எண்ணிக்கை மற்றும் உள்ளபடியான எண்ணிக்கையினை ஒப்பீடுசெய்த போது 02 வருமான விடயங்களில் 08 சதவீதம் முதல் 114 சதவீதம் வரையும் மற்றும் 09 செலவின விடயங்களில் 20 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சிலும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை. | ஆரம்ப காலாண்டுகளில் செலவினங்களைச் செய்வதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பிரகாரம் நிதி கிடைக்கப்பெறாமை மற்றும் செலுத்துவதற்கான உறுதிச்சீட்டுகள் சமர்ப்பிக்காமை, இறுதிக் காலாண்டில் நிதியத்தில் கவனத்திற்கொள்ளக்கூடிய வருமானமாக இருந்ததன் காரணமாக செலவினங்களைச் செய்வதற்கு முடியாதிருந்தது. | வருமான மதிப்பீட்டை பொருத்தமான வகையில் தயாரித்தல் மற்றும் பாதீட்டை ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்துதல் வேண்டும். |